R4898

# PRIDE OF HEART ABOMINABLE

# மனமேட்டிமை அருவருப்பானது

"மனமேட்டிமை உள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்." நீதிமொழிகள் 16:5

மனமேட்டிமை விழுந்து போன மானிட மனதின் கண்டிக்கத்தக்க குணங்களில் ஒன்றாக இருக்கிறது. வேத வாக்கியங்களானது இருதயத்தின் இரண்டு நிலைமைகளாகிய சரி மற்றும் தவறு என்ற இரண்டையும் அங்கீகரிக்கின்றன. அன்பு என்கிற ஒரு குணத்தை தேவன் அங்கீகரிக்கிறார்; சுயநலத்தை நிராகரிக்கிறார். எல்லா சுயநலமும் தேவனுடைய பிரமாணத்தால் எதிர்க்கப்படுகிறது. சுயநலமான எதுவும் தேவனுடைய நோக்கத்திற்கு எதிரானது, மனமேட்டிமை கர்த்தருக்கு அருவருப்பானது. ஏனெனில் மனமேட்டிமை கொண்ட எந்த சிருஷ்டியும் பிரபஞ்சத்தில் இல்லை. யாராவது பெற்றிருக்கிற அனைத்தும் ஒரு பரிசு. அது அவனது சொந்த உற்பத்தியோ அல்லது சிருஷ்டிப்போ இல்லை. தேவன் ஆசீர்வாதத்தை கொடுக்கிறார். "நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்து உண்டாகி, ஜோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கி வருகிறது." (யாக்கோபு. 1:17) நாம் பெற்றிருப்பது அவரது நிறைவாக இருக்கிறது. ஆகையால் மன மேட்டிமை உள்ளவர் எவரும் தேவனுடைய பார்வையில் மிகவும் கண்டிக்கப்படத்தக்கவர்கள். ஏனெனில் அவன் கிருபையை, ஆசீர்வாதத்தை பெற்றிருக்கிறவனாக இருக்கிறான். தேவனுடைய அனைத்து ஜீவிகளும் அவரையே சார்ந்திருக்கின்றன.

உலகப் பிரகாரமான மேட்டிமை தேவனில் விசுவாசம் மற்றும் அவருக்கு கீழ்ப்படிதலை எதிர்க்கிறது. நல்ல தைரியமும் கர்த்தரிடத்தில் முழு நம்பிக்கையும் உடைய தேவனுடைய ஜனங்கள் மட்டுமே இந்த ராட்சத பெருமையை ஜெயங்கொள்ள முடியும். ஜெயத்தை முழுமையாக்குவது அவசியம். மேட்டிமையானது, மறுபடியும் எழும்பி நம்மை அழிக்காதபடிக்கு, அதன் ஒவ்வொரு வடிவத்திலும முற்றிலுமாக அழிக்கப்பட வேண்டும். இந்த சண்டையை ஒவ்வொருவரும் தனியாக போரிட வேண்டும். ஜெயங்கொள்ளுவதற்கு ஏற்ற சரியான ஆயுதம் ஆவியின் பட்டயமாகும். இதுவே தேவனுடைய பார்வையில் சந்தோஷப்படுத்துவதாகவும் ஏற்புடையதாகவும் இருக்கிறது. "தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவன் எவனும் உயர்த்தப்படுவான்." (லூக்கா 18:14)